**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 22.08.2025**

| | | |
|---|---|---|
| பெயர்: | ரமா (மருத்துவர்) | **ஜாதி:** |
| தந்தை பெயர் | | **தொழில்:** |
| கிராமம்**:** | | **சமயம்:** |
| தாலுகா**:** | | **வயது:** |

**(எதிரி 3 ஆஜர். எதிரி 2 ஆஜர்படுத்தப்பட்டார். )**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சென்னை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன் . 01.03.2019 ம் தேதி சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றினேன் . அன்று சிவகங்கை நகர் காவல் நிலையத்திலிருந்து குற்ற எண் .101/2019 வழக்கு சம்பந்தமாக இறந்து போன காளிதாஸ் என்பவரது இறப்பு சம்பந்தமாக பிரேத பரிசோதனை செய்ய மேற்படி காவல் நிலைய காவலர் முத்தையா மூலமாக வேண்டுகோள் கடிதம் பெற்றுக்கொண்டேன் . பிரேத பரிசோதனை 01.03.2019 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஆரம்பித்தேன். பிரேதம் நடுத்தர ஊட்டத்துடன் கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிரி போய் காணப்பட்டது. பிரேதத்தில் விரைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது**. இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் -1, 7x4** கழுத்து வரை ஆழமுள்ள சாய்வான குத்துக்காயம் கழுத்துக்கு முன் பக்கம் நடுவில் நாடிக்கு 6 செ.மீட்டருக்கு கீழேயும் , முதுகு வெட்டு இடத்திற்கு 4

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.08.22 18:53:47 +0530

செ.மீட்டர் மேலேயும் காணப்பட்டது , மேற்படி காயத்தின் ஒரு முனை கூர்மையுடன் இன்னொரு முனை சீரற்று சிதைந்தும் காணப்பட்டது . அதன் விளிம்புகள் சீரற்றும் காணப்பட்டது . அதை கூராய்பு செய்த போது காயம் அடியில் உள்ள கழுத்து தசைகள் இரத்த நாளங்கள் மற்றும் மூச்சுக்குழாய் வெட்டி காணப்பட்டது –2, 4*1*1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் கழுத்தின் முன் பக்கம் முதல் காயத்திற்கு 2 செ.மீட்டருக்கு மேலே காணப்பட்டது. **பிறப்பகுதி விபரங்கள்** வயிற்றறை, மார்பறை காலியாக காணப்பட்டது. இதயத்தின் அறையில் சீராக காணப்பட்டது. இதயம் சீராக காணப்பட்டது. அதன் வெட்டு தோற்றத்தில் வெளிரி போய் காணப்பட்டது . தமணிகள் சீராக காணப்பட்டது. நுரையீரல்கள் சீராக காணப்பட்டது. அதன் வெட்டுத் தோற்றம் வெளிரி போய் காணப்பட்டது . குரல் நாண் மற்றும் மூச்சுக்குழாய் நாண் மேலே விவரிக்கப்பட்டது . நாவடி எலும்பு சீராக காணப்பட்டது. வயிற்றறையில் 100 எம்.எல் பழுப்பு நிறத்தில் கார நெறியுடன் திரவம் காணப்பட்டது . அதில் உள்பக்கம் ரத்த கசிவுடன் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் இரு சிறுநீரகங்கள் வெட்டுத் தோற்றத்தில் வெளிரி போய் காணப்பட்டது . சிறுகுடலில் 20 மில்லி பித்த நிற திரவம் கார நெறியுடன் காணப்பட்டது . அதில் உள்பக்கம் இரத்த செறிவுடன் காணப்பட்டது. நீர்ப்பையில் 10 மில்லி வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. மூளை அதில் இரத்தக்குழாய் வெட்டுத் தோற்றத்தில் வெளிரி போய் காணப்பட்டது . கழுத்து உடல் உறுப்புகளில் ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது . ரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்ற பின்பு நான் இறுதி கருத்தாக இறந்துபோன நபர் அவருக்கு ஏற்பட்ட காயம் 1.குத்துக்காயத்தினால் அதிர்ச்சி மற்றும் ரத்தப்போக்கினால் இறந்திருக்கிறார் மற்றும் அவருக்கு பிரேத பரிசோதனைக்கு முன்பு

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.08.22 18:53:58 +0530

12லிருந்து 24 மணி நேரத்திற்குள் இறப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன் . நான் பிரேத பரிசோதனை அறிக்கை அ .சா.ஆ.9. அவரின் உள் உறுப்புகளில் ரசாயன பகுப்பாய்பு அறிக்கையில் இறப்பின் போது மது அருந்தி இருந்தார் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது . ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து நான் பெற்ற ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.10. நான் வழங்கிய இறுதி அறிக்கை அ .சா.ஆ.11. என்னிடம் காட்டப்படும் சா .பொ.7 பாட்டிலால் குத்தும்போது இந்த வழக்கில் இறந்துபோன நபருக்கு ஏற்பட்டுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னிடம் ஆய்வாளர் ஆயுதத்தை காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் காண்பித்து விசாரித்தார் . என்னை என்று விசாரித்தார்கள் என்றால் நான் பிரேத பரிசோதனை செய்த அன்றே விசாரித்தார்கள் . எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 12.00 மணிக்கு விசாரித்தார்கள். இந்த வழக்கில் இறந்துபோன ஏற்பட்ட காயம் பொதுவாக கத்தியால் குத்தி இருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்பில்லை . வேறு கூர்மையான ஆயுதத்தால் இறந்து போன நபரை தாக்கும் போது அவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் முனை கூர்மையாக இல்லாத ஆயுதத்தால் தாக்கும் போது ஏற்பட வாய்ப்புள்ளது . ஒரு உடைந்த பாட்டிலால் குத்தும் போது அந்த பாட்டில் அகலம் உள்ள அளவிற்கு தான் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் குத்தி உள்ளே சென்று இழுக்கும் போது காயம் நீளமாக ஏற்பட வாய்ப்புள்ளது . உடைந்த கண்ணாடி துகள்கள் இறந்த பிரேதத்தின் உடலில் காயத்தில் இல்லை என்றால் சரிதான் . என்னுடைய பிரேத பரிசோதனைக்கு முன்பு காவல்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.08.22 18:54:07 +0530

ஆய்வாளர் உடைந்து போன பாட்டிலை என்னிடம் காண்பித்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் , அந்த சமயத்தில் சா .பொ.7 கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.08.22 18:54:16 +0530